கனம் தலைமை குற்றவியல் நடுவர் / சிறப்பு நீதிபதி இராமநாதபுரம்
அவர்கள் முன்பாக

**Under Section 173 BNSS**

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8167233

1. District : இராமநாதபுரம் மாவட்டம் PS: ஊ.த.க பிரிவு காவல்நிலையம் Year: 2025 ஆண்டு FIR No.: 05 மு.த.அ. எண் Date: 19.03.2025 நாள்

2. (i) Act சட்டம்: PC Amendment Act 2018 Sections பிரிவுகள்: 7(b) of PC Amendment Act 2018
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : 18.03.2025 நாள் முதல் மதியம் Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : 12.00 மணி நேரம் முதல் Time to : நேரம் வரை முற்பகல்
   (b) Information Received at PS. Date : 19.03.2025 காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : 11.00 மணி நேரம்
   (c) General Diary Reference: Entry No(s) தொகுதி-I பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : வாய் மொழியாக
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 20 கி.மீ மேற்கு
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், மென்னந்தி குரூப் (இருப்பு) சத்திரக்குடி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : கா. சுந்தரராஜன் குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : காளிமுத்தன் தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : 72/25 நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : இந்தியன் நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : கூலி தொழில் (g) Address : முகவரி சின்ன நாகாச்சி கிராமம், மென்னந்தி, பரமக்குடி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திருமதி. அபி பேகம் ராணி @ சின்னப்பொண்ணு,
   கிராம உதவியாளர்.
   மென்னந்தி குரூப்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   – தாமதம் ஏதுமில்லை –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கிறேன் : M.குமரேசன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம் மாவட்டம் ஆகிய நான் இன்று 19.03.2025 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு அலுவலக பணியில் இருக்கும் போது வாதி சுந்தராஜன் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று புகார்தாரர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், மென்னந்தி குரூப் கிராம உதவியாளர் திருமதி.அம்பேத்ராணி@சின்னப்பொன்னு ஆகியோரது முன் நடத்தை குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டும் புகார் வாக்குமூலம் குறித்த விபரங்களை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தென் சரக காவல் கண்காணிப்பாளரிடம் தகவல் தெரிவித்து அனுமதி பெற்றும், இராமநாதபுரம் ஊதக பிரிவு குற்ற எண்.05/2025 u/s 7 (b) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018ன் படி இன்று 19.03.2025 ஆம் தேதி 11.45 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் வாக்கு மூலம் பின்வருமாறு இன்று 19.03.2025 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் (M.குமரேசன்) இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்த போது பரமக்குடி தாலுகா, மென்னந்தி குரூப், சின்ன நாகாச்சி கிராமத்தைச் சேர்ந்த காளிமுத்தன் மகன் கா.சுந்தரராஜன்,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

கா. சுந்தரராஜன்
19.3.2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
19.03.2025

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
19.03.2025 - 12.00 மணி

Name: பெயர் M. குமரேசன்
Rank: நிலை .................... No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க பிரிவு,
இராமநாதபுரம்.

<u>இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 05/2025 u/s 7 (b) of Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் தொடர்ச்சி</u>

வயது 72/2025 என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலம் பின்வருமாறு நான் மேலே கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் முதியோர் உதவித் தொகை பெற விண்ணப்பம் செய்து எனக்கு முதியோர் உதவித்தொகை 2025ஆம் வருடம் பிப்ரவரி மாதம் கிடைத்தது. இந்நிலையில் 14.03.2025 ஆம் தேதி மென்னந்தி குரூப் கிராம உதவியாளர் அம்பேத்ராணி@ சின்னப்பொன்னு என்பவர் எனது வீட்டிற்கு வந்து உங்களுக்கு OAP வந்திருச்சு. உங்களுடைய ஆதார் கார்டு மற்றும் போட்டோவை எடுத்துட்டு விஏஓ ஆபிசுக்கு வரச்சொன்னார். அதற்கு நான் எனக்கு தான் OAP ஏறிருச்சுல ஆதார்கார்டும் போட்டோவும் எதுக்கு கேக்குறீங்க எனக்கேட்டதற்கு, அதற்கு அவர், OAP வாங்கிட்டு எதுவுமே கவனிக்காம அமைதியா இருக்கீங்க நாளைக்கு விஏஓ ஆபிசுக்கு வாங்க பேசுவோம் எனச் சொன்னார். நான் நேற்று 18.03.2025 ஆம் தேதி சுமார் மதியம் 12.00 மணியளவில் விஏஓ அலுவலகத்திற்கு நேரில் சென்றேன். அங்கு விஏஓ இல்லை அங்கிருந்த மென்னந்தி குரூப் கிராம உதவியாளர் அம்பேத்ராணியை சந்தித்த போது, நானும் விஏஓவும் தான் உங்களுக்கு OAP கிடைக்க பரிந்துரை செய்தோம். அதற்காக எங்களுக்கு ரூ.4000/- கொடுங்க எனக்கேட்டார். அதற்கு நான் எதுக்கு உங்களுக்கு ரூ.4000/- கொடுக்கனும் எனக்கேட்டதற்கு நீங்க பணம் கொடுக்கலைன்னா OAP ரெகுலரா வாங்கமுடியாம ரத்து செய்து விடுவோம் என சொன்னார். அதற்கு நான் OAP பணத்தை நம்பி தான் வாழ்ந்துட்டு இருக்கேன் எனச்சொல்லி நீங்க கேட்ட அவ்வளவு பணம் என்னிடம் இல்லை எனச் சொன்னேன் அதற்கு அவர், விஏஓ அம்மா ரூ.4,000/-க்கு குறைச்சு கொடுத்தா வாங்க மாட்டாங்க நான் வேண்டுமானால் சொல்லி பாக்குறேன் நாளைக்கு ரூ.3,000/-மாவது கொண்டு வந்து என்னை பாருங்க எனச்சொன்னார். நான் அதற்கு எதுவும் பேசாமல் அங்கிருந்து வெளியில் வந்து யோசித்து பார்த்து கவர்மெண்ட் வேலையை செய்ததற்கு என்னிடம்

லஞ்சப்பணம் கேட்ட மென்னந்தி குரூப் கிராம உதவியாளர் அம்பேத்ராணி என்பவர் மீது புகார் செய்ய முடிவு செய்தேன். ஆகவே, எனக்கு OAP வாங்கி கொடுத்ததற்கு வெகுமதியாக என்னிடம் லஞ்சப்பணம் ரூ.3000/- கேட்ட மென்னந்தி குரூப் கிராம உதவியாளர், அம்பேத்ராணி என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். புகார் வாக்குமூலம் வாதி சொல்ல சொல்ல என் முன்னிலையில் தலைமைக்காவலர் திருச்சந்திரக்குமார் என்பவரால் எனது அலுவலக கணினியில் டைப் செய்யப்பட்டது. படித்துக்காட்ட நான் சொன்னபடி சரியாக உள்ளது. இப்படிக்கு (ஒப்பம்) K. சுந்தரராஜன். Received the complaint on 19.03.2025 at 11.00 hrs and Enquired the Character and Antecedents of the complainant and Accused and registered a case in Ramnad V&AC, Cr.No.05/2025 u/s 7 (b) of P.C. Amended Act 2018 at 11.45 hrs. (Sd) M.Kumerasan, Inspector of Police. V&AC, Ramanathapuram 19.03.2025. இதன் அசலையும், வாதியின் புகார் வாக்குமூலத்தையும் இணைத்து கனம் தலைமைக்குற்றவியல் நடுவர் நீதிபதி/சிறப்பு நீதிபதி, இராமநாதபுரம் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

19.03.2025

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு
இராமநாதபுரம்.